Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் வருஷம் மே மீ 29உ, வெள்ளிக்கிழமை [இதழ் 21

## "வாழ்விற்கு அவசியம் நம்பிக்கை"

### நம் முடிவு உறுதியானது

### இந்தியா மந்திரி பிரசங்கம்

சென்ற 1942-ம் வருஷம் மே மீ 24உ சாம்ராஜ்ய நாள் விழாவை இந்திய மந்திரி கனம் அமெரி ஆரம்பித்து வைக்கும் முறையில் ஒரு ரேடியோ பிரசங்கம் செய்தார். அப்போது அவர் கூறியதாவது :—

> உலகில் உள்ள எல்லா ஸ்தாபனங்களிலும் குறைகள் உண்டு: அது போலவே தான் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலும். என்றாலும் விடுதலையையும் நீதியையும் நிலை நாட்டுவதில் உலகத்திலேயே சிறந்த ஸ்தாபனமாக விளங்குகிறது.

தற்போதுள்ள கஷ்ட நிலையில், நம் சம்ராஜ்ய வாழ்விற்கு மிகவும் இன்றியமையாதது நம்பிக்கை தான். இப்போது நாம் மிகவும் கடுமையான கஷ்டங்களுக்கு உள்ளாகி யிருப்பதன் காரணம், சென்ற மகா யுத்தத்திற்குப் பிறகு நாம் நம்பிக்கை யிழந்தது தான்.

ஹாங்காங், சிங்கப்பூர், மலேயா, பர்மா ஆகிய நாடுகளை நாம் இழந்தோம். இந்த அழகிய நாடுகளை எதிரிகள் கைப்பற்றி அடிமைப் படுத்தி விட்டார்கள். இதற்குக் காரணம் அந்நாட்டு மக்கள் இராஜ விசுவாச மில்லா திருந்தார்கள் என்று சொல்ல முடியாது. அல்லது அங்கிருந்த நிர்வாகிகள் திறமை யில்லாதவர்க ளாகவோ; அனுதாப மில்லாதவர்க ளாகவோ இருந்தார்கள் என்றும் சொல்ல முடியாது. ஆனால் பிரிட்டிஷ் கடற் படையின் உதவியினால், சமாதானத்தை நிலை நாட்டி விடலா மென்று நாம் நினைத் திருந்தது தான் தவறு. போருக்கு அந்நாட்டு மக்களை நாம் பழக்கவு மில்லை. யுத்தத்தின் பொருட்டு நாம் அவர்களைக் கஷ்டப் படுத்தவு மில்லை.

**இந்திய விடுதலை**

எதிர் காலத்தில் இந்தியா விடுதலை பெற வேண்டும் என்பது பற்றி பிரிட்டிஷ் சர்க்கார் எவ்வளவு உண்மையாகவே ஆசைப் படுகிறார்கள் என்பதை மெய்ப்பிக்கிறதற்காகவே தான் சர் ஸ்டாபோர்ட் க்ரிப்ஸ் இந்தியாவிற்குப் போனார். நாம் வழங்க இருந்ததை இந்தியர்கள் ஏற்க மறுத்து விட்டாலுங் கூட, நாம் கொண்டிருக்கும் முடிவு மட்டும் உறுதியானது. பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளின் ஒரு கௌரவமான அங்கமாக இந்தியாவும் இருக்க வேண்டும் என்பது தான் நமது ஆசை.

---

## சென்னையில் தேசீயப் போர் முனை.

### ஆரம்ப விழாவில் கவர்னர் பேச்சு.

### சென்னையின் படை பலம்.

சென்னை நகரமே சேர்ந்து விட்டது. ஐலண்ட் மைதானத்தில். ஏ.ஆர்.பி. நகரப் பாது காப்புப் படை, செஞ் சிலுவை சங்கத்தாரும் அணி வகுத்து நின்றனர். எண்ணிக்கைக்கும் அடங்காத மோட்டார் கார்கள் முறைப் பட்டு நின்றன. ஒரே திருவிழாக் கோலம். ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் பல்லாயிரக் கணக்கில் பவனி வருவது போல் அங்கே போய்க் கொண்டிருந்தார்கள். அங்கு அமைக்கப் பட்டிருந்த மேடை மீதே அனைவர் கண்களும் பதிந்திருந்தன. ஒரு மகத்தான ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. ஆம், தொழிலாளர்கள் தான். அவர்கள் உள்ளத்தில் ஊன்றி யிருக்கும் ஊக்கம் அவர்களுடைய முகங்களில் பிரதி பலித்தது. அவர்கள் கையில் ஒரு பெரிய கொடியைப் பிடித்துக் கொண்டு வந்தனர். அக் கொடியில் "அனைவரும் ஒன்று பட்டு, தேசீயப் போர் முனையில் சேர வாருங்கள்" என்று எழுதி யிருந்தது. இந்த ஊர்வலம் எங்கிருந்து கிளம்பியது தெரியுமா? தேசீயப் போர் முனையின் சென்னை ஜில்லா அமைப்பாளரான ராவ் சாஹிப் ஆல்பர்ட் ஜேசுதாசன் அவர்கள் வீட்டிலிருந்து தான். ஏ.ஆர்.பி. வண்டிகளும், படையினரும் ஊர்வலமாகச் சென்றனர். உடற் பயிற்சி யாளர்கள் தம் திறமையை விளக்கிக் காட்டினார்கள். இன்று 1942-ம் வருஷம் மே மீ 23உ மாலை மணி 5-30.

மேன்மை தங்கிய சென்னை கவர்னர் வந்திறங்கினார். காப்டன் ஹார்வி அவரை வரவேற்றார். திவான் பகதூர் ஏ. அப்பாதுரைப் பிள்ளை அவருக்கு மாலை யிட்டார். சென்னை நகரத்தைக் காக்க வேண்டி என்னென்ன முயற்சிகள் செய்யப் பட்டிருக்கின்றன என்று பொது மக்கள் உணரத் தக்க படி இராணுவ அணிவகுப்பும் நகர காவலர் அணிவகுப்பும் நடந்தன. பிறகு மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் செய்த பிரசங்கத்தின் சுருக்கமாவது.

இன்று சென்னையில் தேசீயப் போர் முனையை ஆரம்பித்து வைக்கின்றேன். இது மிகவும் நெருக்கடியான காலம். எனவே, இந்தியாவை முதன்மை யாக்க வேண்டும். இந்தியாவின் எல்லைகளிலே அட்டகாசம் செய்து கொண்டிருக்கும் நாஜிகளின் கொடுமைகளையும் ஜப்பானியரின் கொடுமைகளையும் கவிழ்த்து விட வேண்டு மென்னும் மன உறுதியோடு ஒன்று பட வேண்டும். இதற்காகத் தான் இந்த ஸ்தாபனம் நாடு முழுதும் அமைக்கப் படுகிறது.

**அரசியல் வேற்றுமைக்கு அல்ல.**

இந்தியாவிலுள்ள அரசியல் கட்சிகளோடு மாறுபட்டு நிற்க வேண்டும் என்பது இந்த ஸ்தாபனத்தின் எண்ண மல்ல.

நம் தலை வாசலில் வந்து நிற்கும் விரோதியை விரட்டி அடிக்கும் பொருட்டு இந்தியர், பிரிட்டிஷார், இந்து, முஸ்லீம், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார், ஆகிய எல்லோரும், அவர்களுடைய கட்சி எதுவாயிருந்தாலும், தேசப் பற்றோடு வந்து இந்த தேசீய யுத்த முனைக்கு ஆதரவு தரும்படிக் கோருகிறேன். இம்மாகாணத்தி லுள்ள முக்கியமான இனங்களின் பிரதி நிதிகள் இங்கே இன்று கூடியிருக்கிறார்கள்.

அரசியல் துறையிலே இவர்கள் எல்லோரும் ஒன்றுபட்டிருந்தவர்கள் அல்ல. தம் நாட்டுப் பற்றினாலும், வெற்றி யடைய வேண்டும் என்னும் மன உறுதி காரணமாகவும் அவர்கள் இன்று ஒன்று கூடி யிருக்கிறார்கள்.

இந்த ஸ்தாபனத்தின் நோக்கங்களாவன :—

**நோக்கங்கள்.**

1. யுத்தத்தை எதிர்த்து நிற்க வேண்டும் என்னும் எண்ணத்தைப் பொது மக்கள் மனத்தில் உறுதிப் படுத்த வேண்டும். 2. இந்த உணர்ச்சி பரவ வொட்டாதபடி தடுக்கும் எல்லாவற்றையும் வேர் அறுக்க வேண்டும். 3. ஐந்தாம் படையினரின் முயற்சிகளைத் தடுக்க வேண்டும். 4. நாஜி தத்துவமும், பாசிசத் தத்துவமும் எந்த உருவத்தில் அமைந்திருந்தாலும், அவற்றை நம் நாட்டு மக்கள் எதிர்த்துப் போராடுவதற்கு வேண்டிய நம்பிக்கையையும், தைரியத்தையும், மன உறுதியையும் மக்களிடையே உண்டாக்க வேண்டும்.

இந்தப் போர் முனை இரண்டு வகை வேலைகளைச் செய்ய வேண்டி யிருக்கிறது. 1. வெளியே யிருந்து வரக் கூடிய பயத்தைப் போக்க வேண்டும். 2. உள் நாட்டில் உள்ள தோல்வி மனப்பான்மையை அகற்ற வேண்டும். நம் நாட்டில் உள்ளவர்களின் போராடும் திறமையைக் குறைக்கும் பொருட்டு பேசுகிறவர்களையும், எழுதுகிறவர்களையும் நடந்து கொள்ளுகிறவர்களையும், வெளிக்குக் கொண்டு வந்தால் மட்டும் போதாது. தேசீயப் போர் முனைப் படையினர், தாங்கள் நாள்தோறும் பேசும் போதும், எழுதும் போதும் வெற்றி உணர்ச்சி அவர்கள் உள்ளத்தில் பதியத் தக்கபடி செய்ய வேண்டும். பணமே பிரதானம் என்னும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு ஆதிக்கம் பெற்றுள்ள அரசுகளை வெல்லும் பொருட்டு நம்மால் ஆன அனைத்தும் செய்ய வேண்டும் என்பது இந்தியா மீது உண்மையான பற்றுள்ளவர்களின் முதல் கடமையாகும் என்று விளக்கிக் கூற வேண்டும். இதே கருத்துடையவர்கள் அனைவரும் தம் நண்பர்கள் என்று அவர்கள் நினைக்க வேண்டும்.

இந்த தேசீய போர் முனையை உத்தியோகஸ்தர்கள் அங்கீகரித்து ஆதரித்து இருந்த போதிலும் இதில் பெரும்பாலும் உத்தியோகப் பற்றில்லாதவர்களே இருக்கிறார்கள். உத்தியோகம், அதில் மேல்படிக்கு உயருவது, அரசியல் கட்சி சம்பந்தம், ஆகியவை இவர்களுடைய இலட்சியங்கள் அல்ல. ஆனால் இந்தியாவின் சுய மரியாதையில் மிகுந்த அக்கரை யுடையவர்கள் ; உலக அமைப்பில் எதிர்காலத்தில் இந்தியாவின் நிலைமை எப்படி இருக்க வேண்டும் என்பதில் கவலை யுள்ளவர்கள். தம் முழு நேரத்தையும் இதன் பொருட்டே செல விடுகிறவர்கள்.

இவர்கள் ஆயிரக் கணக்கான ஆண்களையும், பெண்களையும் இந்த இயக்கத்தில் சேர்ப்பார்கள். இவர்கள் உண்மையானபடி யுத்தச் செய்திகளையும், சரியான கருத்துக்களையும் பொது ஜனங்கள் உணரத் தகுந்தபடி அறிவிப்பார்கள். இதன் பயனாக, தம் நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் தம் நாட்டின் நிலைமையும், தம் நிலைமையும் என்ன என்று எளிதில் தெரிந்து கொள்ளும்படி செய்வார்கள்.

தரைப்படை, கப்பல்படை, ஆகாயப்படை, நகரக் காவல்படை ஆகிய படைகளில் சேரும்படி பொது ஜனங்களை ஊக்கி உதவுவார்கள். யுத்த வீரர் அரசாங்க உத்தியோகஸ்தர்கள், வியாபாரிகள், தொழில் நிபுணர்கள், மாணவர்கள், தொழிலாளர்கள் அனைவரும் இந்தத் தேசீய யுத்த முனையில் சேர வேண்டும்.

இதன் நோக்கம் என்ன ? ஒற்றுமை. யுத்த மனப்பான்மை. நாம் மிகவும் அருமையானதென்று கருதுவது நம் நாகரிகம். நமக்கும் நம் நாகரிகத்திற்கும் எதிரிகள் என்று முடிவு கட்டப் பட்ட ஜெர்மானியர்கள், இத்தாலியர்கள், ஜப்பானியர்கள் ஆகியோரைத் தாக்கி வெல்லும் பொருட்டு, நமக்குள் இருக்கக் கூடிய வேற்றுமைகளை மறந்து, கூட்டுறவோடும், தைரியமாகவும், மகிழ்ச்சியோடும் நம் பலமெல்லாம் திரட்டி எதிரிகளைத் தாக்க வேண்டும். அதனால் எவ்வளவு மகத்தான நிலைமை ஏற்படுமென்று எண்ணிப் பார்க்கும்படி பொது ஜனங்களைத் தூண்ட வேண்டும்.

**சென்னையின் சிறந்த தொண்டு.**

நான் இந்த இயக்கத்தின் தலைவனாக இருக்கிறேன். இந்தத் தேசீயப் போர் முனையை மேன்மை தங்கிய வைசிராய் பிரபு ஆரம்பித்த காலத்தில், தற்காலத்திற்கு மிகவும் அவசியமானதோர் காரியத்தைத் தான் அவர் செய்கிறார் என்று நான் நினைத்தேன். சென்ற இரண்டு வருஷங்களாக யுத்த முயற்சியில் நாம் சிறந்த வேலை செய்திருக்கிறோம். நாம் செய்துள்ள வேலையால் நமக்குப் பெருமை யுண்டு. இருந்தபோதிலும், அடுத்த சில மாதங்களில் இந்தியாவிற்கு நேரக் கூடிய ஆபத்துக்களி லிருந்து காப்பாற்றும் பொருட்டாக வாவது, தம் வேற்றுமைகளைப் பாராட்டாது, ஆண்களும், பெண்களும், குழந்தைகளுங் கூட, ஒன்றுபட வேண்டியது அவர்கள் கடமையாகும்.

தன் நாட்டில் நம்பிக்கையும், இந்தியாவிற்கும் எதிர்காலத்தில் ஒரு நல் வாழ்வு உண்டு என்பதில் நம்பிக்கையும், (பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் எதிர் காலத்தில் நம்பிக்கை கொள்ளா விட்டாலும்) கொண்டவர்கள் ஒவ்வொருவரும் தேசீயப் போர் முனையில் சேர்ந்து எல்லா வகைகளிலும் உதவ வேண்டியது அவசியமாகும்.

**யுத்த மனப் பான்மையை உண்டாக்குக.**

நம்மால் என்ன முடியும் ! நாம் எல்லோரும் செய்யக் கூடிய வேலைகள் எத்தனையோ இருக்கின்றன. நாம் எல்லோரும் போர் வீரர்களாகச் சேர்ந்து விடமுடியாது. ஆனால் படைகளில் சேரும்படி மற்றவர்களுக்கு நாம் எடுத்துச் சொல்லலாம். வயதானவர்களுடைய பயத்தைப் போக்க நாம் முயற்சிக்கலாம். தம் பிள்ளைகள் படைகளில் சேருவதை அவர்கள் விரும்ப மாட்டார்கள். இன்னும் யுத்தம் முடிய வில்லை யாகையால் இளைஞர்கள் மேலும் மேலும் படைகளில் சேர வேண்டியது அவசியம் என்று அவர்களுக்கு நாம் எடுத்துச் சொல்ல வேண்டும். யுத்தம் முடிய வெகு காலம் செல்லலாம். அப்போது நம் மாகாணத்தி லிருந்து அநேக இளைஞர்கள் போர் முனைக்குப் போக வேண்டி நேரலாம். இதை அவர்களுக்கு எடுத்துச் சொல்லி பயத்தைப் போக்கலாம்.

இது சமாதானமான கால மல்ல, யுத்த காலம் என்னும் எண்ணத்தைப் பொது மக்கள் உள்ளத்தில் ஊன்றும்படி செய்ய வேண்டும். அதற்கேற்றபடி, நம் ஒவ்வொருவர் வாழ்க்கை முறையையும் மாற்றி யமைத்துக் கொள்ள வேண்டும். சிக்கனமான முறையில் எளிய வாழ்க்கையை நாம் நடத்தி எவ்வளவு தொகை மீதி செய்யக் கூடுமோ அவ்வளவு தொகைக்கும் சேம நிதிப் பத்திரங்களாவது, யுத்தக் கடன் பத்திரங்களாவது வாங்கிக் கொள்ள வேண்டும். சமாதான காலத்திய இன்ப வாழ்வை மறந்து விட வேண்டும். யுத்த காலத்தின் கொடுமைகளைத் தான் நம் மனதில் நினைக்க வேண்டும். அரசியல் துறையிலும், சமூதாயத் துறையிலும் மற்றெல்லாத் துறைகளிலும் நம் பழைய நிலைமையை மறந்து விட வேண்டும். தற்கால நிலையில் நம் கவனத்தைச் செலுத்தி எதிர்கால வாழ்வில் கண்ணோட்டமா யிருக்க வேண்டும்.

வெளி ஜில்லாக்களில் உள்ளவர்கள் ஏராளமாக எல்லா வகை உணவுப் பொருட்களையும் சாகுபடி செய்ய வேண்டு மென்று தூண்ட வேண்டும். ஏனென்றால் உணவுப் பஞ்சம் ஒருக்கால் ஏற்படக் கூடும். புதிதாக எந்த அளவிற்கு நிலம் சாகுபடியாகிறதோ, அந்த அளவிற்கு நம் மாகாணத்திற்கு நல்லது.

**தோல்வி மனப்பான்மையைத் தடுக்கவும்.**

எல்லா வகைகளிலும், தோல்வி மனப்பான்மையை, ஒவ்வொருவரும் தடுக்க வேண்டும். ஜப்பானியர்களோடு நேசம் கொண்டாட வேண்டுமென்று சொல்லுவது கோழைத்தனமாகும். பொய் வதந்திகள் ஒருவர் வாயினின்று பிறந்து, பிறர் வாயிலிருந்து பெருகிப் பிறந்து, உருமாறி விடுகின்றன. இவற்றையும் தடுக்க வேண்டும். ஜப்பானியர்கள் இந்தியாவை விட்டுப் போகும் போது

தம் கை யாட்களை இங்கே வைத்து விட்டுப் போய் இருக்கிறார்கள் என்பதில் கொஞ்சம் கூடச் சந்தேகமே கிடையாது. இந்தக் கை யாட்கள் இம்மாகாணத்திலுள்ள ஜனங்களைப் பயமுறுத்த தம்மால் ஆனவையெல்லாம் செய்கிறார்கள். இந்தியா முழுதிலும் இவர்கள் வேலை செய்கிறார்கள்; முடிவில் ஜப்பானியர்கள் வெற்றி யடைவார்கள் என்று கூறுகிறார்கள். இந்த துர் பிரசாரம் வெகு விரைவாகப் பரவுகிறது. இந்தப் பிரசாரத்தையும் தடுக்க வேண்டும். நாள் தோறும் பொய் மூட்டைகளை அளக்கும், டோக்கியோ ரேடியோவைக் கேட்காதீர்கள். அகில இந்திய ரேடியோவும், பி.பி.சி. ரேடியோவும் உண்மைகளையே கூறுகின்றன. இந்த உண்மைகள் சில சமயங்களில் விரும்பத் தகாதனவாகவும் இருக்கலாம்.

‘ஜப்பானுக்கு மகத்தான வெற்றிகள் கிடைத்திருக்கின்றன; ஆகையினால் ஜப்பான் தான் யுத்தத்தில் ஜெயிக்கும். “அப்போது தாம் சென்று யுத்தப் போர் முனையிலோ யுத்தமுயற்சியிலோ ஈடுபட வில்லை என்றும், ஜப்பானியர்களுக்கு விரோதமாகத் தாம் எதுவும் செய்ய வில்லை என்றும், கூறி, நாங்கள் நல்ல பிள்ளைகள், எங்களை ஏற்றுக்கொள்ளுங்கள்” என்று கூறக் கூடிய தோல்வி மனப்பான்மை படைத்தவர்களும் இருக்கின்றார்கள். இந்த மனப்பான்மை அதிகமாக இல்லை. என்றாலும், இப்படிப்பட்ட மனப் பான்மை யுடையவர்களும் இருக்கத் தான் செய்கிறார்கள். இந்த மனப் பான்மை அவர்களுடைய கேவலமான, நாட்டுப் பற்றில்லாத, கோழைத் தனத்தைத் தான் குறிக்கிறது. இப்படிப்பட்ட மனப் பான்மையைப் போக்க, நல்லெண்ணமுடைய அனைவரும் தம்மாலான முறைகளை யெல்லாம் கையாள வேண்டும். எதிர் காலத்தில் நிகழக் கூடியவற்றை எதிர்க்க அவர்களை ஆயத்தப் படுத்த வேண்டும் அவர்கள் உண்மையை உணரும்படி செய்ய வேண்டும். ஜப்பானியர்கள் ஒருக்கால் வெற்றி பெற்று வந்த போதிலும் கூட அவர்கள் மதிக்காத கோழைத் தனமான போக்கில் நம்பிக்கை கொள்ளக் கூடாது என்று எடுத்துச் சொல்லுங்கள். ‘ஜப்பானியர்கள் ஒருக்கால் வெற்றி பெற்ற போதிலுங் கூட’ என்று நான் கூறியதிலேயே, அவர்கள் வெற்றி யடைய முடியாது என்னும் பொருள் அடங்கியிருக்கிறது. ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி ஆகிய மூன்று நாடுகளும் ஒரே மாதிரியாக பிறரைக் கொடுமைப்படுத்தும் மனப் போக்குடையன. உலகத்தையே கட்டியாள வேண்டும் என்னும் பேராசை கொண்டவை. இதன் பொருட்டு அவர்கள் பிறநாடுகளில் நுழைந்து, வென்று, அந்த நாட்டு மக்களை கொலை செய்கிறார்கள். அவர்கள் வென்ற மற்ற நாட்டு மக்களை அவர்கள் எப்படி நடத்துகிறார்களோ, அதுபோலவே தான் உங்களையும் நடத்துவார்கள். ஜப்பானியர்களை வெல்ல யாராலும் முடியாது என்பது தோல்வி மனப்பான்மையுடையவர்களின் வாயிலிருந்து கிளம்புவது. எனவே, இது பற்றி நீங்கள் எச்சரிக்கையா யிருக்க வேண்டும். ஜப்பானியர்களை வெல்ல யாராலும் முடியாது என்பது தப்பு. அவர்கள் செய்த துரோகத்தினால் அவர்களுக்கு முதலில் சில வெற்றிகள் கிடைத்திருக்கலாம். ஆனால் முடிவு கட்டுவதற்கான பருவம் இன்னும் வரவில்லை. அந்தக் காலத்தில் ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளைப் போலவே ஜப்பானும் தோல்வி யடைவதை நாம் காண்போம் (கரகோஷம்). இவர்கள் அனைவரையும் நாம் வெல்ல வேண்டும். நாம் ஜெர்மனியை முதலில் வென்று விடுவோமானால், அதன் கூட்டாளிகள் தாமாகவே தலை கீழாய்க் கவிழ்ந்து தோல்வி யடைவார்கள்.

அச்சு சர்க்கார்களை நாம் வென்று, அவர்களை உச்சஸ்தானத்தி லிருந்து நிச்சயமாகக் கீழே இறக்கி விட முடியும் என்று நான் உறுதியாகச் சொல்லுகிறேன். எப்படித்தெரியுமா? நேச தேசங்களிடம் எனக்கு பரிபூர்ண நம்பிக்கை யுண்டு. அவற்றின் ஒற்றுமையில் எனக்கு நம்பிக்கை யுண்டு. ஏனென்றால், அவர்கள் நினைவும் செயலும் போராட்டமும் ஒன்று போல் இருக்கின்றன. இந்த நாடுகளில் உள்ள ஒவ்வொருவரும் ஒன்று பட்டிருக்கிறார்கள். தேசீயப் போர் முனையைத் தோற்றுவிக்கும் இன்று, நான் உங்களிடம் கோருவது அது போன்ற ஒற்றுமையைத் தான். எதிரியை முடிவாகத் தோற்கடிக்க வேண்டும் என்னும் ஒரே எண்ணத்தைக் கொண்டு எல்லோரும் ஒன்றுபட்டு யோசிக்க வேண்டும், செயலாற்ற வேண்டும், போராடவேண்டும். அந்த முடிவான தோல்வி அவர்களுக்கு ஏற்படுவது உறுதி. ஏனென்றால், நேச தேசத்தார்கள் அத்தனைப் பேரும் ஒன்று பட்டிருப்பது மட்டு மல்லாமல், ஏராளமான பலமும் படைத்திருக்கிறார்கள். இந்தப் பலம், நாள் தோறும், வாரந் தோறும், மாதந்தோறும் பெருகிக் கொண்டே போகிறது. உள்ளூரில் எவ்வளவு பலம் இருக்கிறது என்று நீங்கள் இன்று மாலை ஒருவாறு நேரில் கண்டீர்கள். இப்படிப் பட்டதோர் பலம் நமக்குக் கிடைக்கும் என்று, சில மாதங்களுக்கு முன் நாம் கனவு கூடக் கண்டிருக்க மாட்டோம். இனி, நாம் காணப் போவதின் ஒரு மிகச் சிறிய பகுதி தான் இன்று கண்டது. இந்தியாவைப் பாதுகாக்கும் பொருட்டு, இந்தத் தருணத்திலே வாரந் தோறும் எல்லா விதமான தளவாடங்களும் ஏராளமாக வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. அன்றியும் எதிரிகளைத் தாக்க இதை நாம் ஒரு தளமாகவும் பயன் படுத்தப் போகிறோம். இதற்காகவும் ஏராளமான தளவாடங்கள் வந்து குவிகின்றன. நாம் எப்போதும் தற்காப்பிலேயே இருந்து கொண்டிருக்க முடியாது. தாக்கிப் போராட வேண்டிய நிலைமையும் மீண்டும் ஏற்படும். இந்திய மக்களின் ஆதரவைக் கொண்டு எதிரிகளை நாம் தாக்குவோமானால், அது எவ்வளவு அற்புதமாயிருக்கும்! சந்தர்ப்பம் ஏற்படுகிற போது ஜப்பானியர்களை தகுந்தபடி உதைக்கிறதற்கு நம் படைகளுக்கு அது ஊக்கந் தரும்.

**நேச தேசங்களின் பலம் பெருகு கிறது.**

இந்த யுத்தம் எப்போது முடியும் என்று எனக்குத் தெரியாது. ‘வானத்தை வில்லாய் வளைத்து விடுவேன’ என்று வீண் வாக்குறுதி தருவதில் பயன் இல்லை. ஆனால், ஒன்றுமட்டும் எனக்குத் தெரியும். அதாவது, தளவாடங்கள், படைகள், விமானங்கள் ஆகியவற்றிலும், மற்றெல்லா வகைகளிலும் நாம் நாளுக்கு நாள் மிகவும் பலமடைந்து வருகிறோம். இது வரை ஜெர்மனியின் உற்பத்தி உச்ச நிலயை அடைந்திருக்க வேண்டும். இது வரை நமக்குச் சில தோல்விகள் ஏற்பட்டாலும், இறுதியில் நாம் உறுதியாக வெற்றி யடைவோம் என்று மட்டும் நான் சொல்லுவேன். இதற்குக் காரணம் நேசதேசங்கள், தம் ஒற்றுமையைக் கொண்டு உதவுவது தான். அந்த வெற்றி எல்லா வகைகளிலும் முழு வெற்றியாகத் தான் அமையும். நாஜி தத்துவத்தையும் பாசிச தத்துவத்தையும் அடியோடு அது அழிக்கும். இன்னும் அநேகத் தலைமுறைகளுக்கு உலகத்திலேயே யுத்தம் நடவாத முறையில் நாம் வெற்றி பெறுவோம் (கரகோஷம்).

மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் ஆங்கிலத்தில் நிகழ்த்திய இப் பிரசங்கத்தை தோழர் ராவ் சாஹிப் ஆல்பெர்ட் ஏசுதாசன் அவர்கள் சுருக்கமாகத் தமிழில் எடுத்துச் சொன்ன பிறகு, ராவ் பகதூர் டி. எஸ். நடராஜ பிள்ளை நன்றி கூறினார். அப்போது, மிகுந்த ஊக்கத்தோடு காப்டன் ஹார்வியும், மிஸ்டர் மாத்யூகம் செய்த அரும் பணிகளை, அவர் பாராட்டினார்.

# ஜப்பானியர் ஆட்சியில் மதங்களுக்கு ஆபத்து.

## மற்ற மதங்களை நசுக்க முயற்சி,

ஜப்பானியர் வென்றுள்ள நாடுகளில் மத சம்பந்தமான சுயேச்சை கூட மறைந்து வருகிறது. இந்த நாடுகளை அடிமை நாடுகளாக்க ஜப்பான் திட்டம் இட்டிருக்கிறது. இங்குள்ளவர்கள் எல்லோரும் ஜப்பானியர் மதமான ஷன்டோய்ஸத்தை ஒப்புக்கொள்ள வேண்டும் என்று நிர்பந்திக்கப் படுவார்கள்.

மகா கிழக்காசிய கூட்டு முன்னேற்றத் திட்டத்தை நிலை நாட்ட வேண்டி எல்லா வகை மத வேற்றுமை

களும் ஒழிந்து ஒற்றுமைப் பட வேண்டுமென்று ஜப்பான் ரேடியோ கூறுகிறது.

ஆசியாவில் உள்ள எல்லா மதங்களையும் ஒன்றுபடுத்தி ஒரு ஆசிய மதச் சங்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்று சமீபத்தில் டோக்கியோவில் நடைபெற்ற டோக்கியோ மத மகா நாட்டின்போது ஒரு திட்டம் வகுத்திருக்கிறார்கள். இதிலிருந்து ஜப்பானியர் கைப்பற்றிய நாடுகளில் உள்ள மத சம்பந்தமான ஏதேச்சைகளைக் கூட அழித்து விடுவார்கள் என்று அமெரிக்கர்கள் கருதுகிறார்கள்.

**மதங்களின் இணைப்பு.**

அடுத்த செப்டெம்பர்மீ ஒரு மத மகாநாடு நடைபெறுமென்றும், அதற்கு சீனா, மங்கோலியா, மஞ்சுலியா, இந்தோசீனா, தாய்லந்து, பர்மா, இந்தியா, இலங்கை, பிலிப்பைன் தீவுகள், மலேயா, டச்சுக் கிழக் கிந்தியத் தீவுகள் ஆகிய நாடுகளி லிருந்து பிரதிநிதிகள் அழைக்கப் படுவார்க ளென்று டோக்யோ ரேடியோ கூறுகிறது. மேலும், இந்து மதம், புத்த மதம், கிருஸ்துவ மதம், இஸ்லாம் மதம், முதலிய எல்லா மதங்களையும் குறித்து விவாதித்து இவற்றை ஒன்று பட இணைப்பதைக் குறித்து அப்போது விவாதிக்கப்படும் என்றும் அறிவிக்கிறது. இதன் மூலம் மற்ற மதங்களை எல்லாம் ஒழித்து விட்டு, மறைமுகமாக ஷின்டோ மதத்தை நிலை நாட்டுவதாகும் இது என்றும், இதனால் மற்ற எல்லா மதங்களும் அதற்குக் கீழ்ப்பட்டிருக்க நேரும் என்றும் அமெரிக்க உத்தியோகஸ்தர்கள் கருதுகிறார்கள். ஜப்பான் அரசருடைய மதம் ஷின்டோ மதம். இந்த மத விஷயங்களை நடத்துகிறவர்கள் ஜப்பான் இராணுவ அதிகாரிகள். தாம் வென்ற நாடுகளில் வசிக்கிறவர்களை இந்த மதத்தில் சேரும்படி வற்புறுத்தும் பொருட்டுத்தான் இந்த சூழ்ச்சி நடக்கிறது. தாம் கைப்பற்றிய நாடுகளில், அரசியல் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் அறிவுத் துறையிலும் தம் கொள்கை இது தான் என்று ஜப்பானியர் போக்கி லிருந்தே ஒருவாறு அறியலாம். தாம் வென்ற நாடுகளிலுள்ள அரசியல் ஸ்தாபனங்களை ஜப்பானியர் நசுக்கி விடுகிறார்கள். அவர்களுடைய செல்வ மெல்லாம் கப்பல் கப்பல்களாகக் கொண்டு போய் விடுகிறார்கள். தம் மொழியையும் அடிமைப் பட்ட நாட்டினர் கற்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள்.

# லிபியாவில் இந்தியச் சேனைகள்.

## சர் ஷாபத் அகமத் கான் ஆப்பிரிக்கா விஜயம்.

மத்திய கிழக்குப் பிரதேச யுத்த களங்களைப் பார்வை யிட்டு விட்டு, இப்போது தான் சர் ஷாபத் அகமத் கான் ஜோஹனஸ்பரோ போய்ச் சேர்ந்தார். அவர் காங்கோவிற்கும் சென்றிருந்தார். லிபியா பாலை வனத்தில் முக்கியமான இந்தியப் படைகளைப் பார்வை யிட்டார். பிறகு, பிரிட்டிஷ் காங்கோவின் அரசியல், பொருளாதார நிலையைப் பற்றி ஆராய்ச்சி செய்யும்படி அந்நாட்டு கவர்னர் ஜெனரல் அனுப்பிய அழைப்பை ஏற்றுக் கொண்டு, அங்கேயும் சென்றார். அவரைப் பத்திரிகைப் பிரதிநிதி பேட்டி கண்ட போது, அவர் கூறியதாவது :—ஜெனரல் ஆசின்லக் தலைமையில் உள்ள படைகளின் உணர்ச்சியைக் கண்டு நான் ஆச்சரிய மடைகிறேன்.

இந்த யுத்தத்தில் தலை சிறந்து விளங்கும் இரண்டு படைத் தலைவர்களும் இந்தியப் படைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களா யிருப்பது பற்றி இந்தியர் நன்றி பாராட்ட வேண்டும்.

பிறகு சர் ஷாபத் எல்லா வகைப் படையினருடனும் பேசினார். ஏழு படைகளுக்கு முன்னால், இந்துஸ்தானியில் ஒரு பிரசங்கம் செய்தார். வட ஆப்பிரிக்காவிலுள்ள நேச நாட்டுப் படைகள், சிரினெய்காவி லுள்ள நாஜிகளை விட யுத்தத் தளவாடங்களிலும், உணர்ச்சியிலும் ஒழுக்கத்திலும் எத்தனையோ மடங்கு மேலானவர்கள்.

வீரத்திலும் ஊக்கத்திலும் மிகவும் நல்ல பெயரை, இந்தியப் படைகள் தமக்கு உண்டாக்கிக் கொண்டன. இதன் பயனாக, வட ஆப்பிரிக்கா முழுதும், இந்தியாவின் மதிப்பு பெரிதும் உயர்ந்து விட்டது. இந்தியச் சேனைகளை விட உயர்வாக வேறு எந்தச் சேனையும் நடந்து கொண்டிருக்க முடியாது.

இந்தியர்களுக்கும் வட ஆப்பிரிக்கர்களுக்கும் ஏற்பட்டுள்ள பரஸ்பர நன் மதிப்பைக் கண்டு நான் மகிழ்ச்சி யடைகிறேன். எதிர் காலத்தில் இந்த இரண்டு நாடுகளுக் குள்ளும் ஒரு நல்ல கூட்டுறவு அமைவதற்கு இது ஒரு நல்ல அறிகுறியாகக் காணப்படுகிறது.

# "விடுதலை பவனி வெற்றி பவனியாக மாறட்டும்."

## ஜெனரல் ஸ்மட்ஸ் பிரசங்கம்.


பிரிட்டிஷ் தென் ஆப்பிரிக்காவின் முதல் மந்திரியான பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸ் சமீபத்தில் ஜோஹனஸ்பரோ என்னும் நகரத்தில் விடுதலை பவனியொன்றை ஆரம்பித்து வைத்தார். அப்போது அவர் பேசியதன் சுருக்கமாவது :—

ஜப்பானுக்குக் குருட்டு அதிர்ஷ்டம் அடித்தது. வெற்றிகளும் கிடைத்தன. இப்போது நிலைமை மாறிவிட்டது. இனி சக்திக்குத் தகுந்தபடி தான் பலன் கிடைக்கும். இந்த யுத்தத்தில் நடப்பு வருஷத்தில் மிகவும் முக்கியமான அம்சம், ஜப்பான் யுத்தத்தில் கலந்தது அல்ல. ஆனால் நமது கட்சியில் உலகத்திலேயே மிகவும் மகத்தானவையும் மகா பலம் பொருந்தியவையுமான ருஷ்யாவும் அமெரிக்காவும் சேர்ந்திருக்கின்றன. இது தான் முக்கியமானது. இந்த இரண்டு நாடுகளும் நம் கட்சியில் சேர்ந்ததனால், அச்சு நாடுகளுடன் ஜப்பான் சேர்ந்ததினால் அவற்றிற்கு ஏற்படக் கூடிய பலத்தை விட, அதிக பலம் பெற்றிருக்கிறோம்.

அல்லாமலும் நாம் ஏராளமாக உற்பத்தியும் செய்ய ஆரம்பித்திருக்கிறோம். யுத்தத் தளவாடங்களிலும், வெடி மருந்துகளிலும் இருந்த குறைபாடுகளை நாம் நீக்கிக் கொண்டோம். நம் படைகளை யுத்தத்திற்குப் பழக்கவும் ஆயத்தம் செய்யவும் போதுமான அவகாசம் இருந்தது. அதன் பயனாக, நிலைமை முன்பிருந்ததை விட மிகவும் முன்னேற்றமடைந்திருக்கிறது.

**1942**-ம் வருஷத்தில் மிக மிகக் கடுமையான யுத்தம் நடைபெறப் போகிறது என்று எனக்குத் தெரியும். இந்த யுத்தத்திலேயே இந்த வருஷந்தான் மிகவும் கடுமையானதாக இருக்கும். இது வரையிலும் கண்டிராத முறையில் தென் ஆப்பிரிக்காவிலும் கூட, இதனால் பல விளைவுகள் ஏற்படக் கூடும். இந்த நிலையை நான் எதிர் பார்க்கிறேன். இதன் பயனாக, ஒரு புதிய சகாப்தம் பிறக்கலாம் என்று நினைக்கின்றேன். இந்த யுத்தத்தின் முடிவை நாம் காண முடியாதிருந்த போதிலும், அந்த முடிவு எந்தத் திசையிலிருந்து வரும் என்று கண்டு கொள்ளலாம். இப்போது நடைபெறும் விடுதலை பவனி, அப்போது வெற்றி பவனியாக மாறட்டும்.

செங்குத்தான பாறை மேல் ஏறும் பிரிட்டிஷ் கமான்டோ படை.



**இவர்கள் மிகவும் கடுமையான வாழ்க்கைக்குத் தங்களை ஆயுத்தப் படுத்திக் கொண்டிருக்கிருர்கள். பல நாட்களுக்குத் தண்ணீரும் தூக்கமும் இல்லாமல் காடு மலைகளெல்லாம் ஏறிப் போராடுவார்கள். எதிரி டாங்கிகளைக் கண்டு பிடித்து திடீரென்று கைப்பற்றுவதில் மிகவும் கெட்டிக்காரர்கள்.**

---

# பர்மாவைப் பற்றி வேவல் கருத்து

## இழந்ததற்குக் காரணம் என்ன ?

லண்டன் "டெய்லி டெலிகிராப்" பத்திரிகையின் நிருபர் ஒருவர் இந்தியப் பிரதம படைத் தலைவர் சர் ஆர்ச்பால்ட் வேவலை அவருடைய முகாமில் மே மாதம் **13**-ம் தேதி பேட்டி கண்டு பேசிய போது நம் படைத் தலைவர் கூறியதாவது :—

நாம் இரங்கூனை இழந்த பிறகு, கடல் மார்க்கமாக சப்ளைகள் வருவதற்கே இடம் இல்லாமல் போய் விட்டது. மழை காலம் வரையிலுமாவது வட பர்மாவை நாம் காப்பாற்றிக் கொண்டிருக்கலா மென்று நாம் எதிர்பார்த்தோம். நமது இடது புரத்தி லிருந்த சீனப் படைகளைப் பிளந்து கொண்டு ஜப்பானியர் படைகள் வந்து விட்டன. இதன் பயனுக லாஷியோவை இழந்தோம். இதை விட முக்கியமான விஷயம் ஒன்று உண்டு. சீனப் படைகளுக்கும் நமக்கும் இப்போதைக்குத் தொடர்பு இல்லாமற் போய் விட்டது. நம் படைகள் மாதக் கணக்காக ஓய்வு என்பதே இல்லாமல் மிகத் திறமையோடு போராடினுர்கள். இவர்களுக்குப் பக்க உதவி யில்லை; வசதிகள் இல்லை. போதாக் குறைக்கு பின்புரமிருந்து சுட்டுக் கொல்லுவதற்கு பர்மியர்கள் தயாராயிருக்கின்றனர். ஒரு குண்டு முதலில் விழுந்தவுடனேயே எல்லாத் தொழிலாளர்களும் ஓடிப் போய் விட்டார்கள். இதன் பயனுக, நாட்டின் நிலைமை, தலை. கீழாக மாறி விட்டது.

பர்மாவில் 5 டிவிஷன் படைகளை ஜப்பானியர் வைத்திருக்கிருர்கள். இப்போதைக்கு, மேலும் பெரிய சேனைகளை இங்கே அனுப்புவார்கள் என்று நாம் எதிர் பார்க்க வில்லை. நாம் போராட இப்போது சாதகமா யிருக்கிறது. எதிரிகள் மேலும் வருவதற்கு மழை தடையா யிருக்கிறது. மலைப் போராட்டத்தில் ஜப்பானியர் மிகவும் கெட்டிக்காரர்கள் தான். என்ருலும், இந்த எல்லைப் புரத்திலே நாம் அவர்களுடன் போராடுவதற்கு, தகுந்த பலத்தோடு தான் இருக்கிருேம். நான் சென்ற இடங்களில் எல்லாம், நம் படைகள் மிகவும் உற்சாகமாகவே இருக்கிருர்கள். ஜப்பானியர்களை வென்று விடலாம் என்னும் உறுதியோடு இருக்கின்ருர்கள்.

---

# ஜப்பானியர்கள் ஆதரவு என்ருல் என்ன ?

## பசியும் கொடுமையுந் தான்.

சென்ற **1941**-ம் வருஷம் ஜப்பான் சர்க்காரும், இந்தோ-சீஞ சர்க்காரும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இதன்படி, இந்தோ சீனர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க ஜப்பானியர்கள் ஒப்புக் கொண்டிருக்கிருர்கள். ஆனுல், இப்போது அங்கே நடப்பது என்ன ? வளம் மிகுந்த அந்த நாட்டைச் சூறையாடுகிருர்கள். ஜனங்களைக் கொடுமைப் படுத்துகிருர்கள், இனி, ஜப்பானியர் ஆதிக்கத்தில் மகா கிழக்காசியப் பொருளாதாரத் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்தோ-சீஞ அமையும் என்று டோக்கியோ ரேடியோ கூறுகிறது. பொருள் நாசம், பசிப்பிணி, ஊழியம் செய்யவேண்டும் என்னும் கட்டாயம் இவற்ருல் அந்த நாட்டு மக்கள் கஷ்டப் படுகிருர்கள். ஜப்பானியர்கள் உணவு விகிதம் மிகவும் குறைவானது. அதைவிடக் குறைவான நிலைக்கு இந்தோ-சீஞ மக்கள் வந்து விட்டார்கள்.

# ஒரு கையில் துப்பாக்கி மறு கையில் சமாதானம்.

## விடுதலை வழங்கும் ஜப்பான் போக்கு.

### ஜெய தேவர் ரேடியோ பேச்சு.

திருவாளர் ஜெய தேவர் கீழ் நாட்டு விவகாரங்களைக் குறித்து ஆராய்ச்சி செய்யும் ஒரு மாணவர். இவர் லண்டன் பி.பி.சி. ரேடியோ மூலம் 1942-ம் வருஷம் மேமீ 13-ம் தேதி ஒரு பிரசங்கம் செய்தார். அதன் சுருக்கமாவது :—

அரசியல் தந்திரத்தில் கைதேர்ந்த பேர்வழி ஜப்பானிய முதல் மந்திரி ஜெனரல் தோஜோ. பிரிட்டிஷாரைத் தலைகீழாகக் கவிழ்த்து விட்டு " இந்தியா இந்தியருக்கே " என்னும் நெடுங் கால ஆசையை மீண்டும் புதுப்பித்துக் கொள்ளுங்கள் " என்று இந்தியர்களுக்கு 'நேசமான' முறையில் இவர் ஆலோசனை கூறுகிறார். இவர் மகா கொடியவர். எனவே இவருக்கு 'சவரக் கத்தி' என்று புனைபெயர் இட்டிருக்கிறார்கள். இந்த ஆலோசனை ஒரு முறையில் வேண்டுகோள் ; மற்றொரு முறையில் பயமுறுத்தலும் ஆகும். நேசத்தோடு கைகுலுக்க ஒரு கையை நீட்டுகிறார். மறுகையில் துப்பாக்கியைக் கொண்டு உங்கள் பேரில் குறி பார்க்கிறார். " இந்திய மக்களைத் தம் எதிரிகளாகக் கருதவேண்டும் என்பது ஜப்பானுடைய எண்ணமே அல்ல ; என்றாலும் யுத்தக் கொடுமைகளுக்கு அவர்களும் ஆளாக நேருமே என்று தான் பெரிதும் அனுதாபப் படுகிறார்கள்," என்று வெகு கெட்டிக் காரத் தனமாக எதும் தெரியாத மகா புண்ணியவானைப் போலப் பேசுகிறார். இவர்கள் வென்ற சீனப் பகுதிகள், மலேயா, ஜாவா, பர்மா ஆகிய நாடுகளில் இவர்கள் வாக்குறுதி கொடுத்தது போல் நடந்து கொள்ள வில்லை என்பது உலகறிந்த உண்மை. அங்கே அவர் கையாண்ட துப்பாக்கி இன்னும் புகைந்து கொண்டு தான் இருக்கிறது.

**பழைய பாடந்தான்.**

1931-ம் வருஷம் மஞ்சூரியாவை ஜப்பானியர் தாக்கிய போது தம் தற்காப்பிற்காகவே அதைத் தாக்கியதாகக் காரணம் கூறினார்கள். ஆஸ்திரியா, ஜெக்கோஸ்லோவேகியா, லக்செம்பர்க், பெல்ஜியம் முதலிய நாடுகளைத் தாக்கிய ஜெர்மனியுங் கூட, இதே பாடத்தைத் தான் படித்தது. 1931-ம் வருஷத்திலும் கூட, தமக்கு சீனர்கள் மீது கொஞ்சங் கூட வெறுப்பே கிடையாது என்று தான் வாய் டம்பம் பேசினார்கள். ஆனால் 'நன்றி கெட்ட' சீனர்கள் சியாங் கெய் ஷேக் ஆட்சியைக் கவிழ்க்கவில்லை. இந்த ஆட்சி மட்டுந் தான் ஜப்பானியர்களுக்கு எதிரியாம்! இந்தப் பழைய பாடத்தைத் தான் மீண்டும் இப்போது ஜப்பானியர்கள் இந்தியர்களிடம் படிக்கிறார்கள். இந்த யுத்தம் கடவுளால் நிர்ணயிக்கப் பட்ட புதிய தர்ம யுத்தமாம்! இதிலிருந்து மூடி வைத்துக் கழுத்து அறுக்கும் இயல்பு உடையவர்கள் ஜப்பானியர் என்று தெளிவாகிறது.

**ஒரு சூழ்ச்சி.**

நம் தலைவாசலில் ஜப்பானியர்கள் வந்து விட்டார்கள். இவர்கள் எப்படிப் பட்டவர்கள் என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அவர்களுடைய யுத்தத் திட்டம் என்ன என்றும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இதற்கு எந்த விதமான பிரதிப் பிரயோசனத்தையும் எதிர் பாராமல் நமக்கு விடுதலையைத் தேடித் தருவதாக் கூறும் இந்தக் கனவான்கள் யார் ? அவர்களுடைய உண்மையான நோக்கம் என்ன ? ஆசியா, ஆசியாக்காரர்களுக்கே, என்னும் இயக்கத்திற்குத் தலைமை தாங்கி உபாத்தியாயர் தனம் செய்ய இவர்களுக்கு என்ன உரிமையுண்டு ? தம் நாட்டிலேயுள்ள ஆராய்ச்சியாளருக்கும் அறிஞர்களுக்கும் விடுதலை யளிக்க மறுக்கும் இவர்கள் நமக்கு விடுதலையைத் தேடித் தருவதாகக் கூறுவதை எப்படி நம்புவது ? இவர்களில் ஆயிரக் கணக்கானவர்களை என் சிறைப் படுத்தி வைத்திருக்கிறார்கள் ? இவர்கள் தானா நமக்கு விடுதலை தேடித் தருகிறவர்கள் ! தன் நலத்தின் பொருட்டு நம்மை ஏமாற்ற அவர்கள் செய்யும் சூழ்ச்சி இது.

**அடக்கு முறைகள்.**

அறிவை அடிப்படையாகக் கொண்ட ஜனநாயகத் தத்துவ சம்பந்தமான கருத்துக்கள் பரவ ஒட்டாதபடி "சமாதானப் பாதுகாப்புச் சட்டப்படி" நசுக்கி விடுகிறார்கள். எல்லா நாடுகளிலும் புகழ் வாய்ந்திருக்கும் மிதவாதிகளான பேராசிரியர்களும், பாரிஸ்டர்களும், டாக்டர்களும், ஆசிரியர்களும் சிறைப் படுத்தப் பட்டார்கள். இந்த அபாயகரமான கருத்துக்களை யுடைய மாணவர்கள் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள்.

"அரசாங்கத்தின் ஒரு பகுதி தான் அரசர்" என்னும் உண்மையை எடுத்துக் கூறிய பேராசிரியர் மினோக் என்பவரை அவர் பதவியி லிருந்து டிஸ்மிஸ் செய்து விட்டார்கள். ஏனென்றால் அரசன் தெய்வப் பிறவியாம் ! சட்டம் முதலிய கட்டுப் பாடுகள் அவரைக் கட்டுப்படுத்தாவாம் !

நாஜி ஜெர்மனியில் தொழிலாளர் இயக்கமும் தொழிற் சங்கங்களும் எப்படி நசுக்கப் படுகின்றனவோ, அதே முறையிலே தான் ஜப்பானிலும் ஆயிரக் கணக்கான தொழிற் சங்கத்தார்கள் நசுக்கப் படுகிறார்கள். அவர்கள் செய்த குற்றந்தான் என்ன ? தமக்கு சாதாரண வாழ்க்கைக்குத் தேவையானவற்றை வாங்கிக் கொள்ள வேண்டி, கொஞ்ச அதிகச் சம்பளம் கேட்கிறார்கள். தங்களுக்கு, மேலும் கொஞ்சம் சுயேச்சை வேண்டு மென்று கோருகிறார்கள். இது தான் அவர்கள் செய்த 'குற்றம்.'

நாஜிகளும் ஜப்பானியர்களும் தம் வாழ்க்கையின் போக்கில் ஏறக்குறைய ஒத்திருக்கிறார்கள். ஜெர்மனியைப் போலவே ஜப்பானிலும் சிறந்த அறிவியக்க நூல்கள் வெளிவர ஒட்டாதபடி நசுக்கி விடுகிறார்கள். சமீபத்தில், பிரஞ்சு மொழியில் சிறு கதைகள் எழுதுவதில் மிகவும் புகழ்பெற்றவரான 'கை டி நாப்பசன்' எழுதிய ஒரு நூலை ஜெர்மனியில் தடுத்து விட்டார்கள். ஜப்பானியக் கல்வி இலாக்கா 'தேசீய அரசியல்' என்றொரு நூலை வெளியிட் டிருக்கிறார்கள். அன்றியும் அநேக சங்கங்களின் வாயிலாக, அரசன் ஆணைகளுக்கு நாம் கண் மூடித் தனமாகக் கீழ்ப்படிய வேண்டு மென்றும் போதிக்கிறார்கள். இதுதான் நாஜிகள் பிரசார முறையும்.

சர் ரவீந்திரநாத் தாகூர் 1937-ம் வருஷம் கீழ்க்கண்டவாறு எழுதி யிருக்கிறார் :—

கீழ் நாடுகளில் காப்பார் அற்றிருக்கும் மக்களுக்கு ஜப்பான் மகா கொடிய ஆபத்தாக இருக்கப் போகிறது என்பதற்குத் தெளிவான அறிகுறிகள் இப்போதே தோன்றுகின்றன. பொருளாதாரத் துறையில் கொள்ளையடிக்கிறார்கள். நாடுகளையும் பலாத்காரமாகக் கைப்பற்றுகின்றனர். இந்தக் கொடுமைகளைக் கேவலமான முறையில் மறைக்க வேண்டி, அநேகம் பேர்களை ஒரே மூச்சில் கொன்று விடுகிறார்கள்.

# வேண்டுவது என்ன?

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவுவேண்டும், உள்ளொன்று வைத்துப் புறம்மொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும் என்று ஆரம்பித்து, பொய்மை பேசா திருக்கவேண்டும், மதிவேண்டும், நின்கருணை நிதி வேண்டும், நோயற்ற வாழ்வில் நான்வாழ வேண்டும், அப்படி இப்படி என்று ஸ்ரீ இராமலிங்க ஸ்வாமிகள், கந்த கோட்ட கடவுளைப் பார்த்து ஏதேதோ வேண்டிக் கொண்டிருக்கிறார். அவரைப் போலவே தான் நம்மவர்களில் பலரும் பகவானைப் பார்த்து, எதை எதையோ வேண்டும், வேண்டும் என்று கேட்ட வண்ணமாக இருக்கிறார்கள். அவ்வாறு கேட்கிறதிலே தப்பு ஒன்றுமில்லை. ஆனால் இப்பொழுது, நாம் எல்லோரும் வேண்டுவது, நோயற்ற வாழ்வு, பொய் பேசாதிருப்பது, நல்லவர்கள் உறவு, இது மாதிரி விஷயங்கள் தவிர, தோல்வி மனப்பான்மை வேண்டாம், இறுதியில் வெற்றி என்ற நம்பிக்கை வேண்டும், சீக்கிரமே அச்சு நாட்டினரின் இடுப்பு ஒடிய வேண்டும், நேச நாட்டினர் கை ஓங்கவேண்டும், ஆதாயத்திலே ஆதிக்கம் பெற வேண்டும். ஐரோப்பாவிலே இரண்டாம் முனை ஏற்படுத்தப்பட வேண்டும். ருஷ்யர்களுக்கு பன்மடங்கு பலத்தைப் பகவான் கொடுக்க வேண்டும். சீனர்கள் அதி சீக்கிரமே வெல்லவேண்டும். ஹிட்லருக்குக் கண் முழி பிதுங்க வேண்டும், உலகத்தி லிருந்து சீக்கிரமே யுத்தம் ஒழிய வேண்டும். என்றெல்லாம் பிரார்த்தனை செய்ய வேண்டிய காலம் வந்திருக்கிறது. எல்லாவற்றையும் வேண்டினாலும், வேண்டா விட்டாலும், இந்தத் தோல்வி மனப்பான்மை இல்லாதிருக்க வேண்டும்; எதிரியை நின்ற விடத்திலேயே எதிர்க்கலாம் என்ற துணிவு ஏற்பட வேண்டும் என்று மட்டும் கட்டாயம் வேண்டியே தீர வேண்டும்.

ஏன் தெரியுமா? ஒரு சிறு கதை. ஒரு மோட்டா மனுஷன். அவனுக்கு ஜென்மத்திலேயும் வியாதி என்பதே வந்த தில்லை. ஒரு நாள் கூட, சுக்குத் தட்டி கஷாயம் போட்டுச் சாப்பிட்டான், டாக்டருக்கு தட்சணை சமர்ப்பிச்சான், ஆஸ்பத்திரிக்கு நடை நடையாக நடந்தான், பகலிலும் படுக்கை விரித்துப் படுத்தான் என்பதே கிடையாது. அப்படிப் பட்ட மனுஷனைப் பார்த்து, அவனுடைய சிநேகிதர்களே ஆச்சரியப் பட்டனர். அந்த சிநேகிதர்களில் ஒரு விஷமி அவனுக்கு என்ன தோன்றிற்றோ என்னமோ, முரடனிடம் வந்தான்.

'என்ன ப்ரதர்? என்ன வந்துடுத்து உங்களுக்கு ப்ரதர்? நேற்றுக் கூடப் பார்த்தேன் சரியாக இருந்தேளே! முகம் வாடியிருக்கு! கண்ணெல்லாம் ஒரு தினுஸா யிருக்கு! தொண்டை கூட! கம்மினாப்போலிருக்கு!' என்று ஆரம்பித்தான். முரடனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அந்த விஷமி சொன்னதில், மருந்துக்குக் கூட நிஜக் கலப்பு இடையாது. ஆனாலும், அவன் கேட்ட கேள்விகளும், நடித்த நடிப்பும் முரடன் மனதில் சந்தேகத்தைக் கிளப்பி விட்டு விட்டன.

கண்ணாடி முன்னாலே ஓடிப் போய் நின்றானவன். கண்களையும், கன்னங்களையும் தடவிப் பார்த்தான். கண்களைக் கையால் அகலத் திறந்து பார்த்தான். 'அ! அ!' என்று வாய் விட்டுக் கத்திப் பார்த்தான். தொண்டையைத் தடவி விட்டுக் கொண்டான். இரண்டு தடவை உட்கார்ந்து எழுந்து 'பஸ்கி' போட்டான். ஒன்றும் கோளாறு இருப்பதாகத் தெரியவில்லை.

'அப்படி மாறுதல் இல்லா விட்டால், நமது ஆப்த நண்பனான அவன் சும்மா சொல்லி யிருப்பானா? அப்படி சும்மா சொல்ல வேணு மென்று அவனுக்கென்ன தலை எழுத்தா? எனக்கே தெரியாமல் என் உடம்பு கெட்டுத் தான் போய்க் கொண்டிருக்கிறப் போலிருக்கிறது' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான் அவன்.

விஷமி சிநேகிதனும் அன்றி லிருந்து தினம் அவன் மனைக்கு வருவது, அவனுடைய உடம்பு நாளுக்கு நாள் தளர்ந்து போவதாகக் கூறுவது, உள்ளூர கறையான் மாதிரி ஏதோ கறுவிக் கொண்டே இருக்கிறப் போலிருக்கு ப்ரதர்! நீங்கள் இப்படி அலக்ஷ்யமாக இருக்கப்படாது. உசிருக்கே ஆபத்து வந்தாலும் வந்துடக் கூடும். சும்மா வெளியில் நட மாடாதிங்க ப்ரதர்! பேசாமே நாலு நாள் படுக்கையிலேயே படுத்துக் கிடங்க. எல்லாம் சரியாப் போயிடும். எல்லாம் போருத வேளை தான். நீங்கள் சாப்பிட்றத்துக்கு என்ன குறைவா? டிபன் சாப்பிட்றத்துக்கு என்ன குறைவா? சுக வாழ்வுக்கு என்ன குறைவா? நம்ப கையிலே என்ன ப்ரதர் இருக்கு? எல்லாம் அவன் செயல், வருவது வந்தே தீரும், பட்றது பட்டே ஆகணும்னு சும்மாவா சொன்னாங்க பெரிய வங்க? நீங்க பயப்படாதிங்க. கொஞ்சம் உடம்பை மட்டும் கவனமாய்ப் பார்த்துக் கொள்ளுங்க என்று சொல்லிப் போய்க் கொண்டிருந்தான்.

சும்மா குண்டு போல் இருந்த அந்த முரடன், இந்த விஷமி விதைத்த பீதி விதை பெரிய மரமாக வளர்ந்து விடவே, சில தினங்களில் உண்மையாகவே காயலாவாகப் படுத்து விட்டான். 'எனக்கு உடம்பு சௌக்கிய மில்லையா? என் கண்கள் உள்ளே போயிடுத்தா? அப்படித் தான் தோன்றது! நடை கூட தள்ளாட்றதே! வயிறிலே ஏதோகட முடாங்கறதே! என்று மனசால் எண்ணி, எண்ணி, அப்படியே படுத்த படுக்கையாகி விட்டான். ஆளே பைஸலாகி விடுவான் போலிருக்கு' என்று சொல்லும் படியான கட்டம் கூட வந்துவிட்டது. அவனைக் குணப் படுத்து வதற்குள் எத்தனையோ நூறு ரூபாய்கள் அவன் பெட்டியி லிருந்து கிளம்பிப் போய்விட்டன. ஆளும் துரும்பாகி விட்டான். வியாதி வருமோ, வியாதி வந்துடுத்தோ, வியாதி தானோ என்றெல்லாம் வீணாக மனசால் நினைக்க நினைக்க, அந்தத் தரித்திரம் பிடிச்ச மனசு உடம்பையே கடைசியில் கெடுத்து விடுகிறது.

அதே போல, நாம் தோற்று விடுவோமோ; எதிரி நம்மை எல்லாம் கட்டிப் பிடித்துக் கொண்டு விடுவானோ என்ற நினைவே நம் மனசிலே ஏற்படக் கூடாது. எல்லோரும் தைரியமாக, வெற்றி நமக்கே! நம்கட்சி நியாயமான கட்சி. ஆகையால் 'நியாயமே

கடைசியில் ஜெயிக்கும்' என்ற எண்ணத்தோடு, யுத்த முயற்சியில் ஈடுபட வேண்டும். தோல்வி நினைவு சும்மா ஏற்பட்டுக் கொண்டிருந்தால் உள்ள தைரியமும், பலமும் போய் விடக் கூடும். வியாதியே இல்லாத முரடனும் வியாதியாக விழுந்தது போல, பலமிக்க நமக்கே, நமது மனதிலேற்பட்ட தவருன நினைப்புக் காரணமாக தோல்வி ஏற்படலாம்.

இதையே தான் நமது கவர்னர் அவர்களும் சென்றவாரம் தேசிய யுத்த முன்னணியை ஆரம்பித்து வைத்து, அதன் தலைவராகத் தானும் சேர்ந்த போது சொன்னுர்கள். இதில் உள்ள பரந்த அர்த்தத்தைத் தமிழ் நாட்டவர் நன்குச் ரசித்துக் கொள்ள வேண்டும். யுத்த நிதி திரட்டுவதிலும், பட்டாளத்திற்கு ஆட்கள் சேர்ப்பதிலும் சென்னை மாகாணம் இந்தியாவிலேயே முதல் ஸ்தானம் பெற்று நிற்கிறது. இதே மாதிரி எல்லாத் துறைகளிலும் இது முதல் ஸ்தானத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்பது நமது ஆசை. இது நியாயமான ஆசை தானே! ஓட்டப் பந்தயத்திற்குப் போகிறோம். அதில், நாம் முதலில் வர வேண்டு மென்று தானே பந்தயத்தில் கலந்து கொள்ளுகிறவர்கள் எல்லாம் ஆசைப் படுவார்கள்?

# வெளியில் பப்பள பளபள! உள்ளே?

ஹிட்லர் ரொம்ப புத்திசாலி தான். இதை யாரும் ஆக்ஷேபிக்க முடியாது. ஏன் என்று கேட்கிறீர்களா? தான் பதவிக்கு வந்தது முதலே, அவர் யுத்தத்திற்கான ஏற்பாடுகளைத் தீவிரமாகச் செய்ய ஆரம்பித்தாரல்லவா! அப்பொழுதி லிருந்தே, பிரசார இலாகாவையும் பலப் படுத்த ஏற்பாடு செய்திருக்கிருர் அவர். அந்த முறையில் தான், டாக்டர் கொயபெல்ஸ் என்ற வாயாடி வீரர் நாஸிக் கட்சியில் ஒரு பெரிய ஸ்தானத்தைப் பெற்றுர். இந்தப் பிரசார மந்திரியின் வேலைகள் என்னென்ன என்பதையும் ஹிட்லர் பாடமாக எழுதிக் கொடுத்திருக்கிருர். 'புளுகுகிற புளுகைப் பெரும் புளுகாகப் புளுகு. யானை கரைந்து கடுகாகயாவது ஆகட்டுமே!' என்பதே அவரது பாடம். அந்தப் பாடத்தை படித்து, பஸ்டு கிளாஸில் தேறி யிருக்கிருர் டாக்டர் கொயபெல்ஸ். வெளியிலே விழுகிற அடிக்கும், உதைக்கும் கணக்கே இராது; அப்பொழுது கொயபெல்ஸ் சொல்லுவார். "நமது வீரர்கள், எதிரிகளை நொறுக்கு நொறுக்கு என்று நொறுக்கி விட்டார்கள். இன்று எதிரிகளில் பல ஆயிரம் பேர்கள் நஷ்டமானுர்கள். நமக்கு சொற்ப சேதம்தான்!" என்று.

இம்மாதிரியே, ருஷ்யாவில் நாளுக்கு நாள் ஜெர்மானியர் அதிக நஷ்டத்தை அடைந்து வந்த காலத்தில் கூட, கொயபெல்ஸ், தம் நாட்டு மக்களுக்கு அழகான சித்திரங்களையே வர்ணித்துக் காட்டிக் கொண்டிருந்தார். உண்மையை யாராலும் மறைக்க முடியாது தான். ஆனுலும், ஜெர்மனியில் உள்ள கட்டுப் பாடுகளும், கொயபெல்ஸின் வாய்ப் பந்தலும் உண்மையை ஓரளவு மறைத்துத் தான் வைத்திருக்கின்றன.

ஜெர்மானியப் படைகளுக்கு ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைக் குறித்து ஜெர்மன் மக்கள் ஒன்றும் தெரிந்து கொள்வதற் கில்லை. அதே மாதிரி ஜெர்மன் மக்கள் படும் அல்லல்களையும், அவர்களுடைய தற்கால மனே நிலைமையையும் பற்றி அதிகமாக வெளி உலகத்திற்குத் தெரிவதில்லை. ஆனுலும், ஜெர்மனியின் உண்மை நிலைமை, வெளிப்புறம் பளபளவென்றும், உள்ளே எல்லாம் பாசி படர்ந்தும் உள்ள பாத்திரங்களை ஒத்தும் இருக்கிறது.

ஹிட்லர் யுத்தத்தை ஆரம்பித்த ஜோரையும், யுத்தம் போகிற போக்கையும் பார்த்த ஜெர்மன் மக்களுக்கு, கூடிய சீக்கிரமே யுத்தம் முடிந்து விடும், ஜெர்மனியின் உருவம் உப்பிப் போய்விடும். தங்கள் பாடு அப்போது வேட்டை தான் என்ற ஆசைக் கனவுகள் தோன்றி யிருக்கும்.

ஆனுல், அவர்களுடைய நினைப்புப் படி யுத்தம் சீக்கிரம் முடிவதாகக் காணேம். ஹிட்லரின் வாயாடி சகாவான கொயபெல்ஸ் சொன்னபடி, ஜெர்மன் தேசத்திற்கு மேலே எந்தப் பயலும் தைரியமாகப் பறந்து வந்து விட்டு, உயிரோடு திரும்பிப்போய் தன் அம்மாவுக்குப் பிள்ளையாக மாட்டான் என்பதும் பொய்யாகி, டம், டம் என்று தினம், ராத்திரி பகலென்றில்லாமல் குண்டுகள், மழை போல் சொரிந்து கொண்டிருக்கின்றன. போதாக் குறைக்கு ருஷ்ய யுத்தம் என்னும் சேறிலே வேறே, ஜெர்மனியின் கால்களைச் சிக்க வைத்துவிட்டார் ஹிட்லர். அந்தச் சேறும் கொஞ்ச தூரம் வரை வியாபித்திருந்தால் பரவாயில்லை. கண்ணுக் கெட்டாத தொலை வரை பரந்திருக்கிறது அந்தச் சேறு. அதிலிருந்து ஜெர்மனி தப்புமா என்பது கவனிக்கப் பட வேண்டிய விஷயம். இப்போதைக்கு எத்தனையோ லக்ஷம் ஜெர்மன் வீரர்கள் ருஷ்ய மண்ணில் பலியாகி விட்டனர். ஓய்வுக் கென்று ஊர் திரும்புவார்கள் தம் மக்களும், மணுளர்களும் என்று எண்ணி, கீழ்த் திசையையே பார்த்துப் பார்த்து ஏங்கிக் கொண்டிருந்த எண்ணற்ற தாய்மார்களும், காதலி மார்களும், இன்று ஜெர்மனியில் மன முடைந்து கிடப்பார்கள் என்பது உண்மை.

நாளுக்கு நாள் உணவுப் பொருள்களுக்குப் பஞ்சம் வரப் பார்த்துக் கொண்டிருக்கிறது. சென்ற வருஷமோ சரியான மழை இல்லை. ஆகவே போதுமான சாகுபடி இல்லை. இந்த வருஷமாவது நல்ல மழை பெய்யாதா என்று எதிர் பார்த்திருக்கிருர்கள். புது வருஷம் பயிரிட என்று, உணவுக் கென வைத்திருந்த ஏராளமான உருளைக் கிழங்குகளைக் கூட, பலர் ஒதுக்கி வைத்து விட்டார்களாம். வெளி நாடுகளி லிருந்து ஜெர்மனியில் வேலை செய்ய ஆள் திரட்டி வருகிருர்கள். போலந்திலே கட்டாய ராணுவ சேவைக் கென ஆள் சேர்க்க ஆர்டர் போட்டு விட்டார்கள். ஏற்கெனவே பத்து லக்ஷம் போலந்து தொழிலாளர்கள் ஜெர்மனியில் வாட்டி வதக்கப் படுகின்றனர். ஆகவே இந்தப் புதுச் சட்டம் போலந்தில் ஏகக் குமுறலை எழுப்பி யிருக்கிறது. அங்கங்கே,

ஜெர்மானியருக்கு விரோதமான ஆர்ப்பாட்டங்களும், சதி வேலைகளும் நடந்து வருகின்றன.

உள்நாட்டில் வேலை செய்யவும் வெளியார் தயவு வேண்டி யிருக்கிறது ; மலைபோல் அசையாது நிற்கும் ருஷ்யர்களை அசைக்கவும் வெளி உதவி தேவையாக இருக்கிறது. ஹிட்லருக்கு முஸோலினியிடம் அவர் தயவாக தயவு கேட்டுக் கொண்டிருக்கிறுப் போலிருக் கிறது. முஸோலினி தான் என்ன செய்வார் பாபம் ! அடிபட்ட கிழப் புலியாகிவிட்டார் அவர். அவருடைய வார்த்தைக்கு முன்பிருந்த மதிப்பெல்லாம், காற்று வாக்கில் போய் விட்டது. இத்தாலியிலே அவரது பேச்சை லக்ஷியம் செய்கிறவர்களின் எண்ணிக்கை தடாலென்று விழுந்து விட்டாப் போலிருக்கிறது. இந்த யுத்தத்தில் நாம் கலந்து கொண்டதால், நமக்குக் கிடைத்த தென்ன ? கேவலம், கார்ஸிகா, நைஸ், ட்யூனிஸ் இம்மூன்று பிரதேசங்களைக் கூட பெறுவதற்கு வழியைக் காணோம். யுத்தத்தில் சேரப் போக, எகச் செலவில் பிடுங்கி வைத்திருந்த அபிஸீனியா அரோஹரா ஆனது தான் நாம் கண்ட பலன். சீ ! இது என்ன சண்டை வேண்டியிருக்கு ?' என்று இத்தாலியர்கள் கலாட்டா செய்கிறுப் போலிருக்கிறது.

ஆனால் இந்தச் சமயத்திலேதான் ஹிட்லருக்கும் ஆள் பலம் அத்யாவசியமாக இருக்கிறது. அதற்காக வேண்டியே அவர் முஸோலினியின் செல்வாக்கைப் பெருக்க, நைஸ், கார்ஸிகா பிரதேசங்களை விஷி சர்க்காரிட மிருந்து கேட்கும் முஸோலினியின் கட்சியை ஆதரிக்கிறுப் போலிருக்கிறது.

இது ஒரு புறமிருக்க, இத்தாலியில் சில இடங்களில் இத்தாலியர் பகிரங்கமாகவே ஜெர்மானியர் மீது தமக்குள்ள த்வேஷத்தை வெளிக் காட்டி யிருக்கிறுர்கள். அடுத்த வீட்டுக்காரன் நம் கழுத்து மேலே வந்து, 'ஸ்நேகம், ஸ்நேகம்' என்று உட்கார்ந்தால், நாம் சும்மா இருப்போமா ?

இத்தாலியில் மட்டுமல்ல, பிரான்ஸிலேயும் ஜெர்மானியரது மூஞ்சியையே காணச் சகியாத மக்களும் இருக்கிறுர்கள். சென்ற வாரம் ஒரு நாள், பீத்தேன் வாலிபர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள், பாரீஸ் நகரத் தெருக்களிலே போலீஸாருடன் சண்டை போட்டார்களாம். இது போக, பிரான்ஸில் பல இடங்களில் நாச வேலைகளும் நடந்து வருகின்றன. ஜெர்மானியர் ஆக்ரமித்துக் கொண்டுள்ள பிரதேசங்களில் உள்ளவர்களும் கொதித்துக் கொண்டிருப்பார்கள். ஹிட்லரின் கை கொஞ்சம் தாழ்ந்தது என்று தெரிந்தால், இந்தப் பிரதேசத்தவர்கள் எல்லாம் 'குப்' என்று கிளம்பி விடுவார்கள் என்பது நிச்சயம்.

இந்தக் கதையை எல்லாம் மறைத்து, அனைத்தும் மலரணையில் படுத்து உருளுவது போலவே நடந்து வருகிற தென்று ஓயாது ஜெர்மன் மக்களுக்குச் சொல்லி வருகிறுர் கொயபெல்ஸ். ஆனாலும் என்ன பயன் ? ஜெர்மன் மக்களுக்கு இத்தனை காலம் வரை உண்மை தெரியாது என்று நினைப்பது சுத்தத் தப்பு.

நேற்று வரை சுகமாக இருந்தவர்களுக்கு, இன்று சோற்றுப் பஞ்சம் என்றால், 'நிலைமை மோசமாகி விட்டது டோய்' என்று தெரியாதா என்ன ?

வசந்த காலப் போர் என ஹிட்லர் தொடர்ந்து நடத்தும் பழைய போரிலே, அவருக்குக் கொஞ்சம் பலன் கிடைத்திருக்கிறது, கொர்ச் பிரதேசத்தை ருஷ்யர்கள் ஜெர்மானியர்களுக்குக் காலிசெய்து கொடுத்து விட்டனர். ஆனால் கார்கோவ் நகர் அருகே ஜெர்மானியருக்கே ஏக நஷ்டம். நஷ்டமிருந்தாலும், அந்நகரைத் தாக்கும் ருஷ்யப் படைகளை மூன்று திசைகளில் சூழ்ந்து கொண்டு விட்டதாக ஹிட்லரின் சீப் பிள்ளைகள் கூறுகிறுர்கள். சீக்கிரமே இந்தச் சண்டையில் முடிவு கண்டால் தான், காஸஸ் பக்கம் ஜெர்மானியர் போகக் கூடும். ஆனால், நல்ல ஆயுதத்துடனிருக்கும் ருஷ்யரை அவ்வளவு லேசாகத் தள்ளிக் கொண்டு போய்விட முடியுமா என்ன ? முடியாது தான் !

ஜெர்மன் நீர் மூழ்கிகள் வேறெது செய்தாலும், செய்யா விட்டாலும், மெக்ஸிகோ எனும் அமெரிக்க நாட்டின் பகைமையைச் சம்பாதித்து வந்திருக்கின்றன. அந்நாட்டைச் சேர்ந்த கப்பல்களை இவை தவிடு பொடியாக்கவே, அந்நாடு அச்சு நாட்டுடன் போர் தொடுக்கத் தீர்மானித்து விட்டது. அவ்வளவுக் கவ்வளவு அதிக சங்கடம் தானே ?

'அமெரிக்கருக்கு ஏக கப்பல் நஷ்டம் ; ஆனாலும் பரவா யில்லை. நீண்ட நாள் நடக்கும் இந்த யுத்தத்தில் நேச நாடுகள் நிச்சயம் வெற்றி பெறும்' என்று ரூஸ்வெல்ட் கூறியிருக்கிறுர். அவரது ஆக்ஞைப் படி அமெரிக்கா வெகு ஜரூராக ஆயுதங்களை உற்பத்தி செய்து வருகிறது. மாதத்திற்கு எட்டாயிரத்திற்கு மேற்பட்ட விமானங்களை அது தயாரிக்கிறதாம். இந்த விமான ஆதிக்கம் இல்லாததால் தானே, இதுவரை பர்மா, மலேயா, சிங்கப்பூர் எல்லாம் போயிருக்கிறது. ஆனால், இன்னும் கொஞ்ச காலத்தில் இந்த நிலைமை மாறும். நம் கை உயரும். அப்பொழுது விழப் போகும் அடிகளின் வேகத்தைப் பாருங்கள். அது வரை நாம் கட்டுப் பாடாக, தோல்வி பீதி மனப் பான்மைக ளின்றி, வெற்றி ஒன்றையே நமது லக்ஷ்யமாகக் கொண்டு, தீவிரமாக நமது பலத்தைப் பெருக்கவேண்டும், அவ்வளவே ! நேச தேசத்தார் பிரம்மாண்டமான சூருவளிக் காற்றை சிருஷ்டித்து வருகிறுர்கள். அது பூரண ஸ்வரூபத்தைப் பெற்றதும், அச்சு நாடுகளை ஆடிக் காற்றி லகப்பட்ட பஞ்சுபோல் பறக்க அடிக்கும் என்பது திண்ணம்.

# யுத்தத்தில் சேதமடைந்தவர்கள்.

## சென்னை சாப்பர்ஸ் மைனர்ஸ்.

சென்னை சாப்பர்ஸ் மைனர்ஸ் பட்டாளத்தில் 5 பேர் இறந்து விட்டனர். 12 பேர் காயப்பட்டனர். 30 பேர் காணுமற் போய் விட்டனர். இவர்கள் பெயர் விவரமாவது :—

### இறந்தவர்கள்.

| நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| 13188 | சாப்பர் .. .. | அப்பலசாமி. |
| 17362 | ஷை .. .. | நீலையா. |
| .. | சலவைக்காரர் .. | இராமசாமி. |
| 17500 | சாப்பர் .. .. | சின்னப்பன். |
| 62840 | ஷை .. .. | பெரியசாமி. |
| 62068 | சாப்பர் .. .. | பொன்னுசாமி. |
| 19115 | ஷை .. .. | ராஜாராவ். |

### காயமடைந்தவர்கள்.

| நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| 17845 | சாப்பர் .. .. | அப்துல் ஜபார். |
| 60867 | ஷை .. .. | கோவிந்தராஜலு. |
| 1132 | தண்ணீர்காரர் .. | கண்ணன். |
| 62039 | சாப்பர் .. .. | முகமத். |
| 15547 | நாயிக் .. .. | முனுசாமி. |
| 17230 | லான்ஸ் ஹவில்தார். | ராமதாஸ். |
| 62024 | சாப்பர் .. .. | ஷேக் சின்ன மஸ்தான். |
| 17843 | நாயிக் .. .. | தாமஸ். |
| 62004 | சாப்பர் .. .. | சுப்பிரமணி. |
| 19437 | ஷை .. .. | குருசாமி. |
| 6339 | ஷை .. .. | டி. நாராயணன். |
| 16170 | லான்ஸ் நாயிக் .. | ஷேக் ஹுஸ்ஸென். |
| 14617 | சாப்பர் .. .. | துரைசாமி. |
| 12734 | ஷை .. .. | தியானகாளி. |
| 42418 | ஷை .. .. | ஹரிசிங். |
| 62080 | ஷை .. .. | கண்ணுசாமி. |
| 19544 | ஷை .. .. | கேசவலு. |
| 19365 | ஷை .. .. | கிருஷ்ண ரெட்டி. |
| 61240 | ஷை .. .. | குப்பன். |
| 19505 | ஷை .. .. | நரசிம்மலு. |
| 11912 | ஷை .. .. | ராம பான்ஸ்லே. |

### காணுமற் போனவர்கள்.

| நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| 19513 | சாப்பர் .. .. | அந்தோனி. |
| 17529 | ஷை .. .. | அப்பாசாமி. |
| 62716 | ஷை .. .. | ஆறுமுகம். |
| 16184 | ஷை .. .. | சின்னப்பா. |
| 1547 | சமையல்காரர் .. | சின்னப்பா. |
| 14243 | லான்ஸ் நாயிக் .. | சின்னசாமி. |
| 61282 | சாப்பர் .. .. | தஸ்தகீர். |
| 19683 | ஷை .. .. | துரைசாமி. |
| 19377 | ஷை .. .. | துரைசாமி. |
| 17232 | சாப்பர் .. .. | கோபால். |
| 18443 | ஷை .. .. | ஜோஷுவா. |
| 62051 | ஷை .. .. | கண்ணன். |
| 16999 | ஷை .. .. | கே. புச்சையா. |
| 1415 | சமையல்காரர் .. | கேளு நாயர். |
| 62079 | சாப்பர் .. .. | கிருஷ்ணன் நாயர். |
| 62080 | ஷை .. .. | மோசே. |
| 14998 | ஷை .. .. | முனுசாமி. |
| 17010 | நாயிக் .. .. | முனுசாமி. |
| 19478 | சாப்பர் .. .. | முனுசாமி. |
| 16594 | ஷை .. .. | முருகேசம். |
| 19617 | ஷை .. .. | நாராயணசாமி. |
| 15553 | ஷை .. .. | பெருமாள். |
| 16603 | ஷை .. .. | பெருமாள். |
| 19491 | ஷை .. .. | சங்கரலிங்கம் பிள்ளை. |
| 19627 | ஷை .. .. | ஷேக்கலிபுல்லா. |
| 16682 | ஷை .. .. | சூசை. |
| 19953 | ஷை .. .. | டி. சி. சுப்பிரமணியம். |
| 6352 | ஷை .. .. | தம்பையன். |
| 62010 | ஷை .. .. | உத்தமன். |
| 18909 | ஷை .. .. | யாகம். |

MADRAS : PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.